மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி, சேலம்

முன்னிலை: திரு. ஆர். ராதாகிருஷ்ணன், பி.எ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி.

2023-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 13-ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், ஆவணி திங்கள் 27 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.4/2023 இன் அ.வ.எண். 28/2018**

1. சின்னு
2. சித்தையன்
3. கனகராஜ்
4. பூபதி ... மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

**//எதிராக //**

சின்னபையன் ... எதிர்மனுதாரர் / வாதி

இந்த மனுவானது 12.06.2023 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.09.2023 ஆம் நாள் இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. S. முருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திருமதி.A. கலைச்செல்வி அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும், மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள் இந்த மனுவை, மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, ஏற்றுக்கொள்ள அனுமதிக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 3 (i) மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

2) **மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

இந்த மனுதாரர் அசல் வழக்கில் 3 ம் பிரதிவாதி ஆவார். மனுதாரர் இந்த மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். மேற்கண்ட அசல் வழக்கில் இந்த மனுதாரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை மற்ற மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இந்த மனுதாரரால் தாக்கல் செய்ய இயலவில்லை.

மனுவில் குறிப்பிட்டுள்ள முதலாவது ஆவணம் இந்த மனுதாரரின் பெயரில் உள்ள பட்டா ஆகும். அதனை தற்போது ஆன்லைன் மூலம் இந்த மனுதாரர் பெற்றுள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள இரண்டாவது ஆவணமான புகைப்படம் மனுதாரரின் கைபேசியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்டுள்ளதும், அதன் ரசீதுமாகும். மேற்கண்ட ஆவணங்கள் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களாகும். மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து இந்த மனுவை அனுமதிக்க கோரி மனுதாரர்கள் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மனுவினை அனுமதிக்காவிடில் இந்த மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும்.

3) எதிர்மனுதாரர்/வாதிக்கு போதுமான வாய்ப்பளித்தும் அவர் தனது தரப்பு எதிருரையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4) மனு பிரச்சனையை தீர்வு காணும் பொருட்டு இரு தரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) **<u>தீர்வு:</u>-**

இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்களால் இந்த மனுவானது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, ஏற்றுக்கொள்ள அனுமதிக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 3 (i) மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

6) மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்ளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். மேற்கண்ட அசல் வழக்கில் இந்த மனுதாரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை மற்ற மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இந்த மனுதாரரால் தாக்கல் செய்ய இயலவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள முதலாவது ஆவணம் இந்த மனுதாரரின் பெயரில் உள்ள பட்டா ஆகும். அதனை தற்போது ஆன்லைன் மூலம் இந்த மனுதாரர் பெற்றுள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள இரண்டாவது ஆவணமான புகைப்படம் மனுதாரரின் கைபேசியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்டுள்ளதும், அதன் ரசீதுமாகும். மேற்கண்ட ஆவணங்கள் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களாகும். மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து இந்த மனுவை

அனுமதிக்க கோரி மனுதாரர்கள் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மனுவினை அனுமதிக்காவிடில் இந்த மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்ற வாதத்தினை முன்வைத்துள்ளார்கள்.

7) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்கள் தரப்பு வாதத்தை மறுத்தளிக்கும் வகையில் எதிருரையோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

8) வழக்கு ஆவணங்களை கவனத்துடன் பரிசீலனை செய்கையில், அசல் வழக்கு எண்.28/2018 ஆனது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. தற்பொழுது அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சி பி.வா.சா.1 சாட்சி மூலமாக ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த நிலையில் இந்த மனுவானது மனுதாரர்கள்/ பிரதிவாதிகளால் ஆவணங்களை முன்னிலைப்படுத்த ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னித்து மனு ஆவணங்களை வழக்கு விசாரணையின்போது ஏற்றுக்கொள்ள தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Gurusamy and others Vs. Santhanam reported in 2005(5) CTC 102 என்ற வழிகாட்டு தீர்ப்புரையில் "... Generally those documents are received subject to proof and relevancy and the admissibility of the documents in evidence should be decided at the time of marking the same as exhibits and at the time of examination of the witnesses, thereby making it as evidence. Till such time the court is not expected to go through the admissibility of the document. Mere producing the documents before the court, whether it is registered or unregistered documents, may not amount to taking the same in evidence as understood in law, and there is further stage for the documents to take a shape of evidence, for relying, only at that stage, the admissibility on the basis of stamp duty, registration, etc. has to be seen in detail..." என்று வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

10) மேற்கூறிய கோட்பாட்டின்படி, ஆவணங்களின் ஏற்புத்தன்மை குறித்து இந்த சமயத்தில் முடிவு செய்ய முடியாது என்பதும், ஆவணத்தின் சான்றுறுதி மற்றும்

தொடர்புரிமைக்கு உட்பட்டு ஆவணங்களை பெறலாம் என்பதும் தெரிய வருகிறது. மேலும், ஆவணத்தினை குறியீடு செய்யும்பொழுது எதிர்மனுதாரர் தனது தரப்பு ஆட்சேபனைகளை எழுப்புவதற்கும், ஆவணங்களை குறியீடுசெய்த பிறகு அந்த ஆவணம் தொடர்பான சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கும் எதிர்மனுதாரருக்கு போதுமான வாய்ப்புகள் உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இந்த மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதகமும் ஏற்படாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரர்களுக்கு எதிரான வழக்கை அவர்கள் மேலும் நடத்திட ஒரு அவகாசம் அளிப்பதே நீதிக்கு உகந்ததாக இருக்கும்என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) முடிவாக, இந்த மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து செய்யப்பட்டு, பின்பு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, நகல் எடுக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 13.09.2023 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R RADHAKRISHNAN
Digitally signed by R RADHAKRISHNAN
Date: 2023.09.14 18:42:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.

**<u>பிற்சேர்க்கை:-</u>** இல்லை

R RADHAKRISHNAN
Digitally signed by R RADHAKRISHNAN
Date: 2023.09.14 18:42:18 +0530

மா.உ.நீ.,
சங்ககிரி.